செ.வெ.எண்: 713/2016 நாள்: 13.10.2016

# பத்திரிகைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாதம் தோறும் விவசாயிகள் கோரிக்கைதினக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெறும்.

அக்டோபர் 2016 மாதத்திற்கான விவசாயிகள் கோரிக்கைதினக் கூட்டம் 20.10.2016 வியாழக்கிழமை அன்று முற்பகல் 11.00 மணிக்கு மாவட்ட ஆட்சியரக நாஞ்சில் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறுகிறது. மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து செப்டம்பர் 2016 மாத கோரிக்கை தினத்தில் பெறப்பட்ட மனுக்களுக்கான பதில்கள் வழங்கப்படும். மேலும் விவசாயிகளின் விவசாயம் தொடர்பான கோரிக்கைகளும் மாவட்ட ஆட்சியரால் நேரில் பெறப்படும். விவசாயிகள் திரளாக கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியருக்காக
நாகர்கோவில்

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**